IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.No. 95/2024 - PW-5

| | |
|---|---|
| Name | திரு. ராஜேந்திரன் |
| Husband/Father Name | ரத்தினநாயுடு |
| Village /Area | கன்னிகாபுரம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | விவசாயம் |
| Age | 75 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.07.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். பிப்ரவரி 2010 ம் ஆண்டு நான் மேல்பாக்கத்திற்கு என் உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தேன். அப்போது திருட்டு நடந்து விட்டதாக 3 நபர்களை போலீசார் பிடித்து வைத்து SR gate அருகே விசாரித்து கொண்டிருந்தார்கள். மேற்படி 3 நபர்களும் அவர்கள் செய்த தவறை ஒப்புக் கொண்டு வாக்குமூலம் அளித்ததை போலீசார் பதிவு செய்து கொண்டார்கள். அ.சா.2 ம் அந்த சமயத்தில் அங்கு இருந்தார். மேற்படி நபர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் மற்றொரு நபர் முன்னிலையிலும் போலீசார் பதிவு செய்து கொண்டார்கள். மற்றொரு நபரின் பெயர் எனக்கு தெரியவில்லை. மேற்படி நபர்கள் எடுத்து கொடுத்த பொருட்களை போலீசார் மகஜரில் கைப்பற்றி கொண்டார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த இரண்டு கம்பல்களை போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிக் கொண்டார்கள். அந்த மகஜரிலுள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.07.07 17:14:29 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.